

# அலகு –5

# நேரம்

## 5.1 நாட்களையும், வாரங்களையும் புரிந்துகொள்ளுதல்

### நினைவு கூர்தல்

ஆசிரியர் வாரத்தின் நாட்களை பலூன்களில் எழுதி, மாணவர்களின் கைகளில் பிடிக்கக் கூறுகிறார். மேலும் மாணவர்களை வரிசையாக நின்று கைகளைக் கோர்த்து பிடிக்கக் கூறுகிறார். இப்போது கீழ்வரும் பாடலை பாடக் கூறுகிறார்.

ஞா, ஞா, ஞாயிறு, ஜாலியா இருக்கலாம்.

தி,தி,திங்கள், ஜில்லென்ற காலை

செ,செ, செவ்வாய், கூப்பிடு நண்பனை

பு,பு,புதன், உயரத்தில் குதிக்கலாம்

வி,வி, வியாழன் , வானத்தைத் தொடலாம்.






வெ,வெ, வெள்ளி, சத்தாக சாப்பிடலாம்

ச,ச,சனி, சட்டென உட்காரலாம்.

எழு, எழு, எழுந்திரு புதிய நாள் உதித்தது,

சுற்றுது, சுற்றுது, பூமி

சூரியனைச் சுற்றுது பூமி

பு, பு, புது, புது நாட்கள் உருவாகுது.



4th_Unit_05_Time_Term 1-TM.indd 62 12/21/2021 3:56:12 PM